அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 23/96

எனது இல. 111/945/எல்ரீசீ/1996/4
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு.7
1996, 07-26

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்.

இத்தீவினுள் மேற்கொள்ளப்படும் உத்தியோக பூர்வ பிரயாணங்கள் - தாபன விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயத்திற்கான திருத்தங்கள்.

தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XIV - இன் பிரிவு 4, உடன் உபபிரிவொன்றாக 4:1:1 சேர்க்கப்படுவதால் திருத்தப்படுகின்றது.

4:1:1 அரச உத்தியோகத்தர்களுக்காக ஏற்பாடு செய்யப்படும் பயிற்சிக் கற்கை நெறிகளில் ஈடுபடுகையில் அவர்கள் தங்கியிருப்பதை எதிர்பார்க்கும் போதும், குறிப்பிட்ட நேரங்களுக்கு மேலதிகமாக அந்தக் கற்கை நெறிகளில் பங்குகொள்ளும் போதும், பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்திருந்தால் மட்டும் பயிற்சி நிறுவனத்தால் ஊக்குகையாக வழங்கப்படும் நிதி உதவிகளுக்கு மேலதிகமாக அவ் அத்தியாயத்தின் 4.4 மற்றும் 5:5 ஆம் பிரிவுகளின்படி இணைந்த படிகளும் 1ஆம் பிரிவின்படி பிரயாணப் படிகளும் பெற முடியும்.

(அ) இணைந்த படிகள் வழங்கப்படும் பயிற்சி நெறிகளுக்குரிய காலம் ஆகக் கூடிய 2 வாரங்களுக்கு வரையறுக்கப்பட வேண்டும்.

(ஆ) வதிவிடத்திற்கும் பயிற்சி நிறுவனத்திற்கும் இடையிலுள்ள தூரம் 07 மைல்களுக்கு மேற்பட வேண்டும்.

(இ) போதல் வருதலை ஒரு பிரயாணமாகக் கருதிக் கொண்டு மட்டும் பிரயாணச் செலவுப் படிகள் வழங்கப்பட வேண்டும்.

ஒப்பம்: ஆர். எஸ். ஜயரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு.